பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 27 வெள்ளிக்கிழமை 10.06.2022 கதிர் 217

### இனி இது ரகசியம் அல்ல!


நேற்று வெளிநாடுகளில் இருந்தும், உள்நாட்டில் இருந்தும் மூன்று, நான்கு தொலைபேசி அழைப்புகள் வந்தன.

'பஸில் ஆளும் தரப்பு அரசியலிலிருந்து சற்று ஒதுங்குகிறார் – எம்.பி. பதவியிலிருந்து விலகுகிறார் – தமது

2







# மத்திய கிழக்கு நாடுகளின் தூதர்களை சந்தித்து உதவி கோரினார் ஜனாதிபதி

## இந்திய, சீனத் தூதர்களுடனும் பேச்சு

ஒன்பது மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ் தானிகர்களை நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேசினார். நெருக்கடியில் உள்ள இலங்கைக்கு உதவும்படி அவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

03

## அரியாலையில் காரைப் பந்தாடியது ரயில் 2 இளைஞர்கள் அந்த இடத்திலேயே பலி

### நேற்று முன்னிரவு நடந்த மோசமான விபத்து





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம். ஜுன் 10

யாழ்ப்பாணம், அரியாலை, புங்கன்குளம் பகுதியில் உள்ள ரயில்வேக் கடவையில் கடந்த காரை கடுகதி ரயில் மோதிப் பந்தாடியதில் அதிக் இருந்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில்

03

## ராஜினாமாக் கடிதம் கையளித்தார் பஸில்



பசில் ராஜபக்ஷ தனது ராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவிடம் நேற்றுக் கையளித்தார்.

03

## பொலிஸ் தலைமையகம் அருகில் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு!



கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னிருந்து காலி முகத்திடலை நோக்கி நேற்று எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக்

03

## சரணடைந்த ஜோன்ஸ்டனுக்கு உடனடியாகவே பிணை அனுமதி



கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் சரணடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு கோடி ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் அடிப்படையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

03

## முகக்கவசம் அணிவது இனிக் கட்டாயமில்லை

உட்புற மற்றும் வெளிப்புற இடங்களில் இன்று முதல் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என சுகாதார அமைச்சு நேற்று (வியாழக்கிழமை) அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றைத் தவிர்ப்பதற்கு இந்த பாதுகாப்பு உத்தியை பயன்படுத்த வேண்டியது கட்டாயமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அசேல குணார்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொவிட்

03

## பஸிலின் மனைவி அமெ. பறந்தார்



முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது எம்.பி. பதவியை நேற்றுராஜினாமாச்செய்யவிருந்த நிலையில் அவரது மனைவி நேற்று வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டுபாய் ஊடாக அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

03

## 50 வெள்ளடியன் இனச் சண்டைக் கோழிகள் கடத்தி வரப்பட்ட போது மன்னாரில் சிக்கின



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 10

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட நல்லினக் கோழிகள் ஐம்பதை மன்னாரில் கடற்படையினர் மீட்டெடுத்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து படகு மூலம் மன்னார் வழியாக நேற்று முன்தினம் ஐம்பது நல்லினக் கோழிகளைக் கடத்தி வந்தவர்கள் மன்னாரில் கடற்படையினரைக் கண்டதும் கோழிகளைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

03

## மஹிந்த இன்னும் கடவுச் சீட்டை ஒப்படைக்கவில்லை

நீதிமன்ற உத்தரவுக்கு மத்தியிலும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல அரசியல்வாதிகள் தமது கடவுச்சீட்டுகளை நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கத் தவறியுள்ளனர் என சட்டமா அதிபர் நீதிமன்றத்தில்

03

## தர்மபுரம் ஆதீனத்தினத்தின் கிளை திருக்கேதீச்சரத்தில்!



வரும் ஜுலை 6ஆம் திகதி இடம்பெறும் திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்தை முன்னிட்டுதமிழ் நாடு திருக்கைலாய பரம்பரை 27ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளாணையின் வண்ணம் அங்கு தருமையாதீன கிளை மடம்

03

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதுகெலும்பு நோவுக்குச் சிகிச்சை பெற அமெரிக்காவுக்குச் சொல்லுகிறார் என்றெல்லாம் இரண்டு வாரங்களுக்கு முன்னரே நீங்கள்தான் முதன்முதலில் குறிப்பிட்டிருந்தீர்கள். உங்கள் எதிர்வு கூறல் சரியாகிவிட்டது' என்ற சாரப்பட அவர்களின் பாராட்டுக்கள் இருந்தன.

அவர்களில் ஒருவர்,'ரணில் பிரதமரா கின்றார் என்ற செய்தியை உறுதிபட முதலில் தெரிவித்த பத்திரிகை உங்களு டையதுதான்' – என்று 'சேர்டிபிக்கெட்' தரவும் தவறவில்லை.

'ஜோதிடக்காரர் மாதிரி நாங்கள் பத்தி ரிகையாளர்களும் அவ்வப்போது பல எதிர்வுகூறல்களைஅவிழ்த்துவிடுவோம். குருடன் பொண்டாட்டிக்கு அடித்த மாதிரி சில சமயங்களில் அவற்றில் சில சரி வந்து விடுவதுண்டு, இதுவும் அப்படித் தானோ, என்னவோ...!' என்று பெரிய தன் னடக்கமாக நடக்கிறேன் என்று எனக்குள் நானே கருதிக் கொண்டு, கூறிச் சமாளித் தேன்.

சரி. இனி இன்றைய விடயத்துக்கு வருவோம்.

புலம் பெயர் தேசத்தில் இருக்கும் சில கடிதத் தலைப்பு அமைப்புகள் பண்ணு கின்ற கியாதி பெருந்தொல்லை.

அண்மையில் அப்படி ஓர் அமைப்பு இலங்கைக்கு உள்ள கடன் நிலுவையான 52 பில்லியன் டொலரை நாங்கள் புலம் பெயர் தமிழர்கள் தருகிறோம், நீங்கள் தமிழீழத்தைப் பிரித்து தர முன்வந்தால் என்ற சாரப்படக் கொழுப்புத் தனமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு குழப்பம் விளைவித்திருக்கிறது

அப்படி ஒரு தொகையை அவர்களால் தர முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க முன்னர், அது எந்தளவு தொகை என் பதை ஒரு தடவை கவனத்தில் எடுத்துக் கொள்வது நல்லது.

52 பில்லியன் டொலர் என்றால் 5,200 கோடி டொலர். அதன் ரூபா பெறு மதி தெரியுமா? இன்றைய டொலர் பெறு மதிபடி சுமார் ஒரு லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபா.

இந்த அளவு தொகைப் பணத்தை தானமாக கொடுக்க புலம்பெயர் தமிழர் கள் உரிய வசதிகளுடன் தயாராக இருக் கிறார்களா என்ற ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

இவ்வளவு தொகையை முதலீடு செய் வது என்பது வேறு. இவ்வளவு தொகையை தூக்கி அப்படியே இலங்கைக்கு கொடுப் பது என்பது வேறு. நினைத்துக் கூடப் பார்க்க முடியாத மிகப் பெரும் தொகை இது. இதை வாரி வழங்குவோம் என்று தேவையில்லாத – முட்டாள்தனமான – அறிக்கைகளை இந்த கடிதத் தலைப்பு அமைப்புகள் வெளியிட அவற்றை நமது அரசியல்வாதிகளும் சமூக ஊடகப் பிரகிருதிகளும் காவிக் கொண்டு சென்று, கடைசியில் சிங்களத்தைத் தேவை இல் லாமல் உசுப்பேத்தும் காரியம்தான் நடக்கிறது.

இந்தச் சண்டப் பிரசண்ட அறிக் கையை வெளியிட்ட கடிதத் தலைப்பு அமைப்புப் பற்றி பல விடயங்கள் எழுத முடியும். வெற்று வேட்டுகளைப்பற்றி அதி கம் நேரத்தை செலவிட வேண்டாம் என்பதால் விட்டுவிடுகிறேன்.

ஆனாலும் அந்தப் பித்தலாட்ட பிர கிருதிகளுக்கு ஒரே ஒரு விடயத்தைச் சுட் டிக்காட்ட விரும்புகிறேன்.

தன்னையும், தனது போராளிகளை யும், தமிழினத்திற்காக ஆகுதியாக்கிப் போராடிய தலைவனுக்கு இந்தத் தொகை யில் அரைப்பங்கை ஒரே சமயத்தில் கொடுத்திருந்தால் அவர் தமிழீழத்தைத் தொடர்ந்து தக்கவைத்து நிலைநிறுத்தி இருப்பாரோ என்னவோ...!

ஹிலாரி, ஒபாமா, டிரம்ப்,பைடன் என்று ஒவ்வொரு வேட்பாளர் பெயரிலும் தமிழர் என்ற நாமத்தை அப்படியே இணைத்துக் கொண்டு, மாறி மாறிச் சங்கம் நடத்தினால் காசு, பணம் கொட் டும் என்று நினைக்கிறார்கள் போலும். அந்த நினைப்பில் அவர்கள் வெளியிடும் அறிக்கைகள், அறிவிப்புகள் இங்கு நாட் டில் தமிழர் பிழைப்பையே கெடுத்து விடும் போல இருக்கின்றன. இருக்கின்ற கடிதத் தலைப்புகளை பொறுப்போடு அவர்கள் பயன்படுத்திக் கொள்வது நல் லது.

– மின்னல் –

# மல்லாவியில் இளைஞர் குழு மோதல்; ஒருவர் உயிரிழப்பு; ஐந்து பேர் காயம்!

இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும், 5 பேர் படுகாயமடைந் துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, மல்லாவி 4ஆம் யூனிட் திரு நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இதன்போது கொட்டான்களால் இளைஞர் குழுக்கள் தாக் குதல் நடத்தியதில் 6 பேர் படுகாய மடைந்து மல்லாவி மருத்து வமனையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர்கள் இருவர் வவு னியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், படுகாய மடைந்த நால்வர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

# எம்.பி. பதவியிலிருந்து 'கப்புடா' பஸில் விலகல்

## எனினும் அரசியல் பயணம் தொடரும் என்கிறார் அவர்




அரச நிர்வாகப் பணியிலிருந்து நான் விலகுகின்றேன். தேசியப் பட்டியல் நாடா ளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கின்றேன். எனினும், எனது அரசி யல் பயணம் தடைப்படாது. அது தொட ரும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகத் திடம் தனது எம்.பி. பதவி விலகல் தொடர் பான கடிதத்தை நேற்று கையளித்த பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணி யின் தலைமையகத்தில் நடத்திய விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுப் பதவியை வகித்த காலத் தில் என்னால் முடிந்தவற்றை மக்களுக் காகச் செய்தேன். எனினும், மக்கள் எதிர்பார்த்த அனைத்தையும் செய்ய முடி யாமல்போனது.

ஊடகங்கள் முன்பாக ஆங்கிலத்தில் பதிலளித்தால் மறுபடியும் 'கப்புடா' சர்ச்சை வந்துவிடும். சிங்கள மொழியி லேயே கதைக்கின்றேன் – என்றார்.

## '21' இற்கு நான் எதிர்ப்பு!

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை நான் எதிர்க்கின்றேன். இது எனது தனிப்பட்ட கருத்து – என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்ன ணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர் பில் பிரதமருடன் பேச்சு நடத்தினோம். அதில் உள்ள சரத்துகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டியது யார் எனத் தெரிய வில்லை. தற்போதைய சூழ்நிலையில் சிறு அளவிலான திருத்தங்கள் தேவை யில்லை. முழுமையான அரசமைப்பு மறுசீரமைப்பே அவசியம்.

எந்த நேரத்திலும் தேர்தலை எதிர் கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தயாராகவே உள்ளது – என்றார்.

## அக்கரைப்பற்றில் யானை தாக்கி ஆண் குழந்தை பரிதாப மரணம்!

அம்பாறை மாவட்டம், அக்கரைப் பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள் ளக்காட்டுப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 6 மாத ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சுதர்சன் சதுர்சன் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந் துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிய ளவில் குறித்த பகுதியில் உள்ள மரம் ஒன்றின் கீழ் குழந்தையை உறங்க வைத்து விட்டு அதன் பெற்றோர் தொழி லில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து அங்கு பிரவேசித்த காட்டு யானை ஒன்று குழந்தையைத் தாக்கியதில் இந்த அனர்த்தம் நேர்ந் துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அக்க



ரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை அக்கரைப்பற்றுப் பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தெற்கில் நேற்று திடீர் மின் தடை

கொழும்பு, ஜூன் 10

நாட்டின் பல பகுதிகளில் நேற்று அதி காலை முதல் மின் தடை ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை முதல், கொழும்பு, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களின் பல இடங்களில் இவ்வாறு மின் தடை ஏற்பட்டுள்ளது.

எனினும், இந்த மின் தடைக்கான காரணம் என்னவென்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

விளம்பரத் தொடர்புகளுக்கு – மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622



காலைக்கதிர்
Kalaikkathir

## 50 வெள்ளாடியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதில் கடத்தி வரப்பட்ட வெள்ளாடியன் இன சண்டைக் கோழிகள் ஐம்பதில், ஏழு கோழிகள் உயிரிழந்துள்ளன.

இதேநேரம் கடந்த வாரம் 5 நல்லின ஆடுகள் கடத்தி வரப்பட்ட சமயம் கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸார் ஊடாக அவை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டமையையடுத்து அவை திருக்கேதீஸ்வர ஆலயப் பட்டியில் பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேலும், அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று மாலை மஹரகம பகுதியில் அமைந்துள்ள கோட்டை நீதிவான் திலின கமகேவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்று சரணடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அதனை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தார்.

அந்த மனுவைவ்நேற்றுப் பகல் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இரவு 8.00 மணிக்கு முன்னர் கோட்டை நீதிவான் முன்னிலையில் அவரைச் சரணடையுமாறு உத்தரவிட்டிருந்தது.

அதுவரை அவரைக் கைது செய்வதற்காகக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணையை நிறைவேற்ற வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையிலேயே ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று மாலை சரணடைந்து பிணை அனுமதி பெற்றுக் கொண்டார்.

## மத்திய கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தச் சந்திப்பு கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமை குறித்து தூதுவர்களுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ விளக்கமளித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைத் தீர்ப்பதற்கு இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி தூதுவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அந்தநாடுகள் இதுவரை செய்துவரும் உதவிகளுக்கு அவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

ஓமான், பாலஸ்தீனம், குவைத், எகிப்து, கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், லிபியா, சவுதி, ஈராக் ஆகிய நாடுகளின் தூதுவர்களை ஒன்றாககவும், சீனா மற்றும் இந்தியாவின் தூதுவர்களை தனித்தனியாகவும் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் மூலம் இலங்கைக்கு உதவி கிட்டுவது தொடர்பில் ஏதேனும் உறுதிமொழிக வழங்கப்பட்டனவா என்பது தெரியவரவில்லை.

## முகக்கவசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொற்றைக் கண்டுபிடிப்பதற்கான பி.ஸி.ஆர். சோதனை, அன்ரிஜன் சோதனை ஆகியனவும் நிறுத்தப்படுவதாக அவர் அறிவித்தார்.

சுவாசக் கோளாறுகள் மற்றும் அது தொடர்பான நோய்கள் உள்ளவர்கள் சாதாரண முகமூடிகளை அணியலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## ராஜினாமாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் 2021 ஆம் ஆண்டு ஜூலை 08 ஆம் திகதி ஒன்பதாவது நாடாளுமன்றத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். பின்னர் பல மாதங்கள் நிதி அமைச்சராக பதவி வகித்தார்.

பசில் ராஜபக்ஷ இதற்கு முன்னர் இரண்டு முறை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 02, சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயவீதி, ஆதன இல 59/15 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பிரசித்தநொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 10.04.2010ஆம் திகதியிடப்பட்ட 6103ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம் தோமஸ் அன்ரனியும் பெண் பதல்டாவும் இது தமது கொள்வனவும் ஆட்சியுமானதுமென குறிப்பிட்டுள்ளனர். எனினும் குறித்த 6103ஆம் இலக்க உறுதியில் தங்களின் 1ஆம் பேரால் 1980ஆம் ஆண்டு அவ்வூர் நாகலிங்கம் அரியரெத்தினம் என்பவரிடமிருந்து 1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எம்.எம்.மன்சூர் முன்பாக முறையான அறுதி உறுதி மூலம் நிறைவேற்றப்பட்டதென்றும், குறித்த உறுதியின் மூலப்பிரதியோ இணைப்பிரதியோ அரசியல் யுத்த நடவடிக்கைகளால் குறித்த நொத்தாரிசு இடம்பெயரவேண்டிய நிலையேற்பட்டதால், காணிப்பதிவகத்தில் ஒப்படைக்காத நிலைமை தேடுதல் விளைவாக இது அறியமுடிந்ததாலும் தங்கள் உரித்தென வெளிப்படுத்தி குறிப்பிட்டுள்ளனர்.

பின்னர் குறித்ததோமஸ் அன்ரனியும் பெண் பதல்டாவும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 01.07.2010ஆம் திகதியிடப்பட்ட 6383ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை யேம்ஸ் அன்ரனிதாஸ்சும் பெண் இராஜலக்ஸ்மிக்கும் வழங்கியுள்ளனர்.

ஆதன அட்டவணை: வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, குருநகர் இறையில் சென்ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதியில் வரிமதிப்பு எண் 59/15 கொண்ட ஆதனமும் வீடும் இதன் விஸ்தீரணம் குளி (3 1/2) மூன்றரையும் அதற்குச் சேர்ந்தவைகளும். இதனெல்லை:

கிழக்கும் தெற்கும்:- ஒழுங்கை.

வடக்கும் மேற்கும்:- சூசைசெபஸ்தியாம்பிள்ளையின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தையேம்ஸ் அன்ரனிதாஸ்சும் பெண் இராஜலக்ஸ்மியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்ததிகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யேம்ஸ் அன்ரனிதாஸ்சும் பெண் இராஜலக்ஸ்மியும் என்னும் பெயரிற்குமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகர முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

## மஹிந்த இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிவித்தார்.

அமைதியான போராட்டக்காரர்கள் மீதுதாக்குதல்நடத்தியமைதொடர்பிலான வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குற்றப் புலனாய்வுப் பிரிவின் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிா ஜினசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, ரேணுகா பெரேரா மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட பலர் இது வரையில் தமது கடவுச்சீட்டை நீதிமன்றக் காவலில் ஒப்படைக்கத் தவறியுள்ளனர் என அவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இவர்களில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிஷாந்த, ரேணுகா பெரேரா மற்றும் மஹிந்த கஹந்தகம ஆகியோர் தங்களுடைய கடவுச்சீட்டு தத் தமது வீடுகளெரிக்கப்பட்டபோது அவையும் எரித்து நாசமாக்கப்பட்டு விட்டன எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனரென அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பலருக்கு பயணத் தடை விதித்து மே 12ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## பொலிஸ் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குண்டு வீசித் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த மே மாதம் 09 ஆம் திகதி காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி ஆர்ப்பாட்டக்காரர்கள்



பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் இவ்வாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டம் காரணமாக கொழும்பு கோட்டையைச் சுற்றியுள்ள பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

## பஸிலின் மனைவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதிகாலை 3.15 மணியளவில் எமிரேட்ஸ் விமான மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அவர் புறப்பட்டு டுபாய் சென்றுள்ளார் எனவும், அங்கிருந்து அவர் அமெரிக்கா செல்லவுள்ளார் எனவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## தர்மபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒன்றை நிறுவி சைவப்பணியாற்ற இருக்கின்றார்கள் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்காக ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரானை நியமித்து பணியாற்ற அவர் பணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## அரியாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடனேயே நேற்று முன்னிரவு

சேர்ந்த இரு இளைஞர்கள் உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



இந்தக் கார் மோதி முற்றாகச் சேதமடைந்தது.

இந்த விபத்தில் தென்னிலங்கையைச்

இருவரும் நேற்று இரவு வரை அடையாளம் காணப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நியாயமான கோரிக்கை

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறுகின்றது இலங்கை.

இந்தத் துன்பியல் கட்டத்திலிருந்து இலங்கை மீளுவதாயின் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை பேணப்படுவது அவசியம் என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்திலிருந்து தொடங்கி அனைத்து சர்வதேச அமைப்புகளும், தரப்புகளும், நாடுகளும் எமக்கு ஆலோசனை கூறுகின்றன. உபதேசங்கள் செய்கின்றன.

இங்கு நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி பலமான கட்டமைப்புகளுடன் பதவியில் இருக்கின்றார். வழமையாக ஜனநாயக நாடுகளின் அரசியல் தலைமைகளுக்கு நாட்டின் இராணுவமும் பாதுகாப்புத்துறையும் அச்சுறுத்தலாக இருக்கும். உதாரணத்திற்கு பாகிஸ்தான். ஆனால் இலங்கையில் அப்படி இல்லை. இப்போதுள்ள ஜனாதிபதி இராணுவ அதிகாரங்களையும், பாதுகாப்புப் படைகள் மீதான முழு ஆளுமையையும் கொண்டிருக்கின்றார். அரசியல் ரீதியாகத் தூக்கி வீசப்பட்டால் கூட, இராணுவ ரீதியாக அசையாமல் பதவியில் உறுதியாக நிலைகொள்ளக் கூடிய வலுவான பிடியில் அவர் அதிகாரத்தில் இருக்கின்றார். முழு அதிகாரமும் வலிமையும் அவரிடம் உண்டு. அதில் எவருக்கும் எள்ளளவு சந்தேகமும் இல்லை.

தவிரவும், அவரது அரசு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மிக வலிமையுடன் ஆட்சியில் அமர்ந்தது.

இப்போதும் கூட அவரது அரசுக்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை தாராளமாக உள்ளது. அதில் சந்தேகமே இல்லை.

அப்படி இருக்கையில் ஸ்திரமான அரசு, ஸ்திரமான ஆட்சிப்பீடம் என்று இந்த சர்வதேச தரப்புகள் கூறுவது எதை? இதைவிட என்ன ஸ்திரமான அரசு வேண்டிக் கிடக்கின்றது? – என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

அங்குதான் – அந்தக் கேள்விக்குள்தான் – இலங்கையின் இப்போதைய பிரச்சினைகளின் அடிப்படை பூடகமாக ஒளிந்து கிடக்கின்றது.

தேர்தல்களில் – ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் – மக்கள் அளித்த ஆணை காலாவதியாகி விட்டது என்ற தார்மீக உண்மை இன்று எல்லோருக்கும் குன்றில் வெளிச்சமாய் துலக்கமாகவும், தெளிவாகவும் தெரிந்து விட்டது.

வலிமையான அதிகாரப் பிடியையும், படைகள் மீதான முழுக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும் ஜனாதிபதி, மக்கள் தந்த இறைமையையும் செல்வாக்கையும் இழந்து விட்டார். இப்போதைய நாடாளுமன்றமும் கூட மக்களின் இன்றைய கருத்து நிலையை – வரவேற்பை – பெற்ற அரசுக் கட்டமைப்பு அல்ல. அதுவும் மக்கள் ஆதரவைத் தொலைத்து விட்டது. சுமந்திரன் எம்.பி. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய படி, நாடாளுமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்கள், ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு என்ற கட்டமைப்புகளுக்கு வெளியில் வந்து, சுயாதீன அணி என்ற மூன்றாவது – விநோதமான – விபரீதமான – 'பாஷன்' அணிகளாகப் பிளவுபட்டு நாடாளுமன்றத்தின் ஸ்திரத் தன்மையையே குழப்பி விட்டார்கள். குலைத்து விட்டார்கள்.

ஜனாதிபதியும், அரசும் அரசியல் ஸ்திரத் தன்மையோடு ஆட்சியைத் தருவதற்கு தாராளமாக வாய்ப்புகள் கிட்டியும் – சந்தர்ப்பம் இருந்தும் – அவற்றைக் குலைத்து, நாட்டை ரணக்களப்படுத்தி விட்டனர் என்பதுதான் யதார்த்தப் புறநிலைமை.

அதனால் ஜனாதிபதி பதவி விலக வேண்டும். இல்லையேல் விலக்கப்பட வேண்டும். நாடாளுமன்றமும் கலைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் சுமந்திரனின் கோரிக்கை முற்றிலும் நியாயமானதுதான்.

# மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைய இடமளிக்கப்போவதில்லை

## கல்வி அமைச்சர் சுசில் திட்டவட்டம்



நாட்டில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளபோதிலும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசாங்கத்தால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போதே கருத்து வெளியிட்ட அவர் –

2020 ஆம் ஆண்டு 197 நாள்கள் பாடசாலை செயற்பாடுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், கொரோனா பெருந்தொற்றால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காரணத்தால், மேல்மாகாணத்தில் 94 நாள்கள் மட்டுமே பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றன.

ஏனைய மாகாணங்களில் 117 நாள்கள் நடைபெற்றன. மேல் மாகாணத்திலேயே அதிக நாள்கள் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

2021 ஆம் ஆண்டு 229 நாள்கள் பாடசாலையின் கல்வி செயற்பாடுகள் நடைபெற வேண்டிய நிலையில், மேல் மாகாணத்தில் 102 நாள்களே பாடசாலைகளின் செயற்பாடுகள் நடைபெற்றன.

ஏனைய மாகாணங்களில் 143 நாள்கள் நடைபெற்றன. 2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணையின் 23 நாள்களில் 14 நாள்களே பாடசாலைகளின் செயற்பாடுகள் நடைபெற்றன.

2 ஆம் தவணையில் தற்போது 24 நாள்கள் உள்ளன. எனவே, எஞ்சிய தினங்களையும் சேர்த்து ஒக்ரோபர் வரையான காலப்பகுதியில் 44 நாள்கள் பாடசாலையின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

உயர்தரப்பரீட்சை மற்றும் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைகளை கவனத்தில் எடுத்து நாம் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் கடந்த காலங்களில் மூடப்பட்டமையால் தரம் 1 – 2 மாணவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள்.

இன்று நாட்டில் கடுமையான பொருளாதார சிக்கல் நிலைமைக் காணப்படுகிறது. ஆனால், இதனால் மாணவர்களின் கல்வி செயற்பாடுகள் பாதிப்படையும் வகையில் செயற்பட முடியாது.

இதுதொடர்பாக நாம் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம். இதில் மாணவர்கள் – ஆசிரியர்கள் நேரம் கடந்து பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கும்போது, சீருடையில் பிரச்சினைகளின்போது, மாணவர்கள் காலணிகளை அணியாதபோது சந்தர்ப்பங்களை வழங்குமாறு நாம் கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளோம். – எனத் தெரிவித்தார்.

# 35 வீத தள்ளுபடியில் எரிபொருள் வழங்க ரஷ்யா முன்வரவில்லை!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றமை போன்று 35% தள்ளுபடியுடன் இலங்கைக்கு எரிபொருளை வழங்க ரஷ்யா முன்வரவில்லை என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தாம் ரஷ்ய தூதுவரை சந்தித்து இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினேன் எனவும் அவ்வாறானதொரு பிரேரணையை தாம் ஒரு போதும் முன்வைக்கவில்லை என அவர் தெரிவித்தார் எனவும் அவர் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

35 வீத சலுகை விலையில் எரிபொருளை வழங்குவதற்கு ரஷ்யா முன்வந்த போதிலும் ரஷ்யாவிடம் இருந்து ஏன் எரிபொருளைக் கொள்வனவு செய்யவில்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரஷ்ய அரசாங்கம் எரிபொருள் வர்த்தகத்தில் நேரடியாக ஈடுபடவில்லை என ரஷ்ய தூதுவர் தன்னிடம் தெரிவித்தார் எனவும் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நான்கு ரஷ்ய நிறுவனங்களின் பட்டியலை அவர் தன்னிடம் வழங்கினார் எனவும் அமைச்சர் கூறினார்.

தான் தனிப்பட்ட முறையில் அந்த நான்கு நிறுவனங்களில், இரண்டு நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

தனக்குத் தொடர்புகள் இருந்தால் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுத்தர மத்தியஸ்தம் செய்யுமாறு அவர் வாசுதேவ நாணயக்காரவிடம் கோரிக்கை விடுத்தார்.

# வடக்கு, கிழக்கில் வீடுகளை நிர்மாணிப்பதில் பாரபட்சம்

## அரசு மீது சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கு, கிழக்கில், நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணித்துத் தரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று இது தொடர்பில் கேள்வி எழுப்பிய அவர், நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்ய முடியாது என்று அரசின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

எனினும், இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அர சின் காலத்தைக் காட்டிலும் தற்போதைய அரசு கடன் அடிப்படையில் அதிக எண் ணிக்கையிலான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன் எம்.பி., இந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வீடமைப்புத் துறையின் முன்னாள் பிரதி அமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டினார்.

எனினும், வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

# இளைஞர்களின் கனவை கலைத்துவிட்டு எம்.பிக்களுக்குப் புதிய வீடு எதற்காக?

## சாணக்கியன் கேள்வி



மாதாந்தம் 50 ஆயிரம் சம்பளம் பெறும் பட்டதாரி இளைஞர்களின் வீடு கட்டும் கனவைக் கலைத்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடு எதற்கு எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் 30 வருட யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து, வீடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசம்.

அந்த வகையிலேயே கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பாரிய வீடமைப்பு வீட்டுத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அந்த வீடுகள் இதுவரை முடித்துக்கொடுக்கப்படாமல் உள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என அரசாங்கத்தின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே வடக்கு கிழக்கில், நல்லாட்சி அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தை காட்டிலும் தற்போதைய அரசாங்கம் கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன், இந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வீடமைப்புத்துறையின் முன்னாள் பிரதியமைச்சர், மேற்படி வீடுகளுக்கு 6 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

எனினும் வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ளவர்கள் வீடமைப்பு சார்ந்த விடயங்களில் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று




மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் 34 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழு ஒன்றால் மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்னாரது சமாதி புனித மரியால் பேராலயத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு நேற்று நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் எகட் ஹரிதாசின் அனுசரணையுடனும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் தலைவர் அருட்தந்தை ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அருட்தந்தை எ.தேவதாசன் அடிகளார் மற்றும் எகட் ஹரித்தாசின் இயக்குநர் அருட்தந்தை ஏ.ஜேசுதாசன் மற்றும் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவின் சகோதரர்கள்,உறவினர்கள்,பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சமாதியில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அன்னாரின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அஞ்சலி உரைகளும் நடைபெற்றன.

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் இலக்கு நோக்கிப் பயணிக்க ஆரம்பித்த காலத்தில், ஆக்கிரமிப்புப் படையினரால் மக்கள் அழிக்கப்பட்டார்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுசெய்து விசாரணையின்றி அடைத்து வைத்தல் போன்ற பல்வேறு மக்களின் துன்ப துயரங்களுக்கு துணிந்து களமிறங்கி சேவை செய்த அருட்தந்தை சந்திரா, தமிழ்த் தேசிய விடுதலையை உள்ளுணர்வோடு நேசித்தமையால் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஏற்றுக் கொண்டவராகக் காணப்பட்டார்.

அதனால் மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட மக்கள் அமைப்பு பலம்பொருந்தியதாகவும், அனைத்து விடயங்களிலும் தகைமைசார் செயற்பாட்டாளர்களை கொண்டிருந்ததற்கும் வண.பிதா சந்திரா அதிபர் வணசிங்க போன்ற தன்னலமற்ற உன்னத மனிதர்களின் செயற்பாடுகளே காரணமென போற்றப்படுகின்றது.

# செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கரகம் சதங்கையணி விழா நடந்தது





மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாறையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு களுதாவளை கிராம சிறுமிகளைக் கொண்டு பழக்குவிக்கப்பட்ட 'கண்ணகை அம்மன் கரகம்' சதங்கையணி விழா புதன்கிழமை இரவு களுதாவளை வாகரையார் வீதியில் இடம்பெற்றது.

களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம், சுவாமி விபுலாந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் கலாநிதி சு.சிவரெத்தினம், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன், மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள், ஆலயங்களின் நிர்வாகிகள், கலைஞர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சிறுமியர்களைக் கொண்டு பயிற்றப்பட்ட கரகம் வடிவமைக்கப்பட்ட களரியில் வைத்து சிறுமியர்களுக்கு காற்சதங்கை அணிவிக்கப்பட்டு, ஆற்றுகை செய்யப்பட்டன. இந்தக் கரகத்தை களுதாவளையைச் சேர்ந்த த.சந்திரலிங்கம் அண்ணாவியார், சி.க.தெய்வநாயகம் ஏடு அண்ணாவியார் குழுவினர், சி.கிஷோவர்மன் மற்றும் ம.கிர்தனன் ஆகிய மத்தளக் கலைஞர்கள் பழக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வருடாந்தம் நடைபெறும் செட்டிபாளையம் ஸ்ரீலஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உத்சவத்தை முன்னிட்டு இவ்வாறு களுதாவளைக் கிராமத்தில் சிறுமியர்களைக் கொண்டு கண்ணகை அம்மன் கரகம் அரங்கேற்றப்படுவது வழக்கம். கொவிட் – 19 காரணமாக கடந்த இரு வருடங்களாக இக்கரகம் அரங்கேற்றம் செய்யப்படாமலிருந்து வந்த இந்நிலையில் இவ்வருடம் மீண்டும் அரங்கேற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு ஒரு தனிநபர் மட்டும் காரணமல்லர்!

## பந்துல கூறுகிறார்

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு ஒரு தனிநபர் மீது மட்டும் குற்றம் சுமத்தக் கூடாது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

மே 9 ஆம் திகதி எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இங்கு உள்ள மக்கள் பிரதிநிதிகள் 72 பேரின் வீடுகள் 12 மணிநேரங்களில் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறான சம்பவங்கள் உலகில் எங்கும் இடம்பெறவில்லை. இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலாகவே நான் கருதுகிறேன்.

83 கலவரத்தைப் போன்று, இந்த சம்பவம் தொடர்பாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம்.

தவறொன்று இடம்பெறலாம். ஆனால் அந்தத் தவறுக்கு இன்னொரு தவறினால் தீர்வொன்றைக் கண்டுவிட முடியாது.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கமோ அல்லது வேறு ஒரு தனிநபர் மீதோ நாம் பழியை சுமத்திவிட முடியாது.


உண்மையில் இந்த நாட்டில் இரண்டு வரவு – செலவுத் திட்டங்களே முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முதலில் நிதியமைச்சராக ஜே.ஆர்.ஜயவர்த்தனவால் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர், பேராசிரியர் என்.எம்.பெரேரா சமர்ப்பித்துள்ளார். இதற்குப் பின்னரான வரவு – செலவுத் திட்டங்கள் அனைத்தும் இன்னொருவர் தயாரித்தே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அன்று ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பாஸ்கரலிங்கத்தால் தயாரிக்கப்பட்டது. இன்று பீ.பி.ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்களின் இந்தப் பாவத்திற்கு இன்று நாமும் சிக்குண்டுள்ளோம். இதனால்தான் நாட்டிலும் இந்தப்பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. – எனத் தெரிவித்தார்.

# மின்வெட்டை அமுல்படுத்தினால் இந்தியாவிடம் உதவி கோரும்படி என்னிடம் கேட்கவேண்டாம்

## மின்சார சபைக்கு ரணில் எச்சரிக்கை



இலங்கை மின்சார சபையின் ஊழியர்களைப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டாமென தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு செய்தால் இலங்கைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள இந்தியா உதவுமென உறுதியளிக்க முடியாது என எச்சரித்தார்.

இலங்கைக்கு எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவு செய்வதற்கு இந்தியா மட்டுமே உதவுவதாகவும் இவற்றை இலங்கைக்கு கொள்வனவு செய்வதற்கு வேறு எந்த நாடும் உதவவில்லை எனவும் பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

எரிபொருள் மற்றும் நிலக்கரி வாங்குவதற்கு எந்த நாடும் எங்களுக்கு உதவவில்லை. உணவு, மருந்து, உரம் வாங்க உதவுவார்கள்.

எரிபொருள் மற்றும் நிலக்கரி வாங்கு வதற்கு இந்தியா மட்டுமே எங்களுக்கு உதவுகிறது. தற்போது இந்திய கடன் வரம்பு மீறப்பட்டுள்ளது. விரைவில் இந்த வசதியை நீட்டிக்க அவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். எங்களுக்கு எரிபொருள் மற்றும் மின்சாரம் தேவை.

நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் ஓர் இருட்டடிப்புக்கு சென்றால், உதவிக்காக இந்தியாவுக்குச் செல்லும்படி என்னைக் கேட்க வேண்டாம்.

அவர்கள் தெருக்களில் இறங்கி போராடலாம். ஆனால், மின்வெட்டுக்கு செல்ல வேண்டாம். முன்மொழியப்பட்ட சட்டமூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் கோரப்படாத முன்மொழிவுகளை அனுமதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை வழங்குவதற்காக இந்த சட்டமூலத்தை நாங்கள் நிறைவேற்றவில்லை. – என அவர் மேலும் தெரிவித்தார்.



## இந்திய துணைத்தூதுவர் மட்டக்களப்புக்கு விஜயம்

இந்திய அரசாங்கத்தின் உதவிகள் இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் சமமாகவே வழங்கப்படுகின்றன எனவும் எந்தப் பிரிவினையையும் இந்திய அரசாங்கம் பார்ப்பதில்லையெனவும் இலங்கைக்காக இந்திய துணைத்தூதுவர் எம்.நடராஜ் தெரிவித்தார். இந்தியாவிற்கான யாழ்.துணைத்தூதுவர் எம்.நடராஜ் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தமையுடன் புதன்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்துக்கு விஜயம் செய்தார்.

விஜயம் செய்த துணைத்தூதுவரை சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பாரதி கெனடி தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

இதன்போது சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய துணைத்தூதுவர் நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

பல மில்லியன் ரூபா செலவில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் அமைக்கப்படவுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தின் நிர்மாணப்பணிகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதன்போது தற்போதைய விலைவாசி உயர்வு காரணமாக மேற்படி ஒன்றுகூடல் மண்டபத்தை அமைப்பதற்கான செலவுகள் அதிகமாகவுள்ளதன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகளவான செலவுகள் ஏற்படும் என்பது தொடர்பில் துணைத்தூதுவரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன் நிதியின் அளவை அதிகரிக்க நடவடிக்கையெடுப்பேன் என துணைத்தூதுவர் உறுதியளித்தார். அத்துடன் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறைக்கு தேவையான உதவிகள் மற்றும் நிறுவகத்துக்குத் தேவையான புத்தகங்களை வழங்கவும் துணைத்தூதுவர் உறுதியளித்தார். இந்தச் சந்திப்பில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த துணைத்தூதுவர், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்துக்கான திட்ட மொழிவுகள் எங்களுக்கு வந்துள்ளன. அந்த திட்டமுன்மொழிவுகளின் செலவுகள் தற்போதைய விலை அதிகரிப்பு காரணமாக அதிகரித்துள்ளன. அதன்காரணமாக ஏற்கனவே வழங்கிய திட்டமொழிவை எவ்வாறு கொண்டுசெல்வது என்பது தொடர்பாகக் கலந்துரையாடினோம்.

அத்துடன் புத்தகங்கள், இசைக்கருவிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள் அதனைப்பெற்றுக்கொடுப்பது தொடர்பில் கலந்துரையாடினோம். அத்துடன் தமிழக அரசால் வழங்கப்பட்ட உலர் உணவுப்பொருள்கள் உத்தியோகபூர்வமாக வழங்கிவைக்கப்பட்டன.

இந்திய அரசாங்கம் இலங்கையில் எந்த மாகாணத்தையும் பிரித்து பார்க்கவில்லை. இலங்கை மக்களின்கோரிக்கைக்கு அமைவாகத் தமிழ் நாட்டின் நிவாரணங்கள் கூட இலங்கையின் அனைத்து பகுதி மக்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

இதேபோன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை கூடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அது தொடர்பிலான கலந்துரையாடலை நான் சென்று மேற்கொண்டேன். – எனத் தெரிவித்தார்.

## அரசுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் ஓயவில்லை!

### மரிக்கார் சுட்டிக்காட்டு




காலி முகத்திடலுக்கு மக்கள் வருகை தருவது கொஞ்சம் குறைவடைந்துவிட்டால், அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் முடிவடைந்துவிட்டதாகக் கருதக்கூடாது என்றும் மக்களின் அடுத்தகட்டப் போராட்டங்கள் சுனாமியின் தாக்கத்தைவிடத் தீவிரமாக இருக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்–

இரண்டுவருடங்களாக நாட்டை நாசமாக்கிவிட்டு, இப்போது நாடு சிக்கலில் உள்ளது என ஆளும் தரப்பினர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பிரதமராக ரணில் வந்தால், வெளிநாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்கும் என்றார்கள். ஆனால், எங்கே கிடைத்தது?

இனவாதத்தைப் பரப்பிபகைத்துக்கொண்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளுடன் தான் இறுதியாக பேச்சு நடத்த வேண்டியுள்ளது.

அந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி, உதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். எண்ணெய்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உலக வங்கியிடமிருந்து 7 கோடியே 90 லட்சம் டொலரும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 8 கோடியே 30 லட்சம் டொலரும் கிடைத்துள்ளன. இதனை வைத்து உரம், எரிபொருள், எரிவாயு, மருந்துப் பிரச்சினையைத் தீர்த்தால், மக்களுக்குள்ள சிக்கல் இல்லாது போய்விடும்.

நாடும் பழைய நிலைமைக்கு வந்துவிடும். சுற்றுலாப் பயணிகளும் மீண்டும் வர ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் மாதத்துக்கு 25 கோடி டொலர் வருமானம் கிடைக்கும். இதனால் ரூபாவின் பெறுமதியும் உயரும்.

எனவே, முடியாது எனக்கூறிக் கொண்டிருக்காமல், செய்ய வேண்டிய விடயங்களை உடனடியாகச் செய்யுங்கள்.

காலி முகத்திடலில் கூட்டம் கொஞ்சம் குறைந்தவுடன், மக்கள் போராட்டம் முடிந்துவிட்டது என சிலர் இன்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், மக்களின் மனங்களில் இன்னமும் போராட்டங்கள் ஓயவில்லை. மக்களின் இந்தப் போராட்டங்கள் பெரிதானால் இரண்டாவது தடவையாக சுனாமி ஏற்பட்டால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறானதொருநிலைமையைக்கூட்சிபேதங்கள் கடந்து அனைவரும் முகம் கொடுக்க நேரிடும்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும். மக்கள் திருடர்களைப் பிடிக்குமாறும் திருடப்பட்ட நிதியை நாட்டுக்குள் கொண்டுவருமாறும் கோருகிறார்கள்.

எனவே, புதிய பிரதமர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என கேட்க விரும்புகிறோம். பண்டோரா ஆவண குற்றச்சாட்டில் சிக்கியுள்ள திருக்குமார் நடேசனைக் கைது செய்வீர்களா?

நாட்டின் இந்த பொருளாதார நிலைமைக்கு முக்கிய சூத்திரதாரிகளாகக் காணப்படும் பீ.பி.ஜயசுந்தர மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை சிறையில் அடைப்பீர்களா?

அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பீர்களா? இவற்றுக்கு எமக்கு பிரதமரிடமிருந்து பதில் வேண்டும்.– என்றார்.

## வடக்கின் நீலங்களின் சமர் இன்று வெள்ளி ஆரம்பம்!

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிகளுக்கிடையிலான கடினப்பந்து போட்டி இன்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அதற்கான ஊடகவியலாளர் சந்திப்பும், போட்டி வீரர்கள் அறிமுக நிகழ்வும் புதன்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் இரு பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இவ்வாண்டுக்கான போட்டிக்கு மொபிட்டல் நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.

வடக்கு நீலங்களின் சமர் என பெயரிடப்பட்டு நடத்தப்பட்டு வரும் மேற்படிபோட்டி 10 போட்டிகள் நிறைவுபெற்று இன்று 11 ஆவது வடக்கின் நீலங்களின் சமராக நடைபெறவுள்ளது.

இரண்டு நாள்களைக்கொண்ட மேற்படி போட்டி இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது. இரண்டாம் நாள் போட்டி மறுநாள் காலை இடம்பெறும்.

ஊடக சந்திப்பின்போது வீரர்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன், புதிய சீருடை மற்றும் புதிய வெற்றிக்கிண்ணமும் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஏன் இந்த வெத்துவேட்டு?

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி




அமெரிக்காவில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர் அமைப்பு ஒன்று, இலங்கை அரசின் 52 பில்லியன் டொலர் பெறுமதி உள்ள வெளிநாட்டுக் கடன்களை அடைத்துவிடுவதற்கு முன் வந்துள்ளதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. அந்த செய்தியின் உண்மைத் தன்மை இன்னமும் தெளிவாகவில்லை. ஆனால், இது போன்ற செய்திகள் கூட நாட்டில் வாழும் தமிழ் மக்களின் எதிர்காலத்திலும் பிரச்சினையை கிளப்புவதாகவே அமையும்.

இத்தகைய கவலைகளுக்கு காரணம் உண்டு. அரசின் கடனை அடைப்பதற்கு பிரதிபலனாக, நாட்டில் தமிழர் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளின் பிரிவினைக்கு உரிய ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பதே அந்த அமெரிக்கா வாழ் புலம்பெயர்ந்தோர் அமைப்பின் நிபந்தனை என்றும் அந்த செய்தி தெரிவிக்கிறது. இந்த அமைப்பு, அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடனுக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழரின் குழு என்றும் செய்தி தெரிவிக்கும் போது, பிரச்சினையின் வீரியம் புரியும்.




இந்த புலம்பெயர்ந்தோர் அமைப்பு கூறுவதெல்லாம், தமிழர் பகுதிகளின் பிரிவினைக்கு, அந்த பகுதிகளுக்கு ஒரு விலை வைத்துள்ளோம், என்பதுதான். நாட்டைவாங்குவதும்விற்பதுவும்வேண்டுமென்றால், அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் பழக்கமாக ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அதுவே, அங்கு வாழும் புலம்பெயர்ந்தோர் மனதிலும் ஊடுருவி இருக்கும் என்று நினைக்கும் போது, ஒரு வித கவலையும் பயமும் தோன்றுவது தவிர்க்கமுடியாததாகி விட்டது.

### யாரின் முட்டாள்தனம்?

உதாரணத்திற்கு, அலஸ்கா, அமெரிக்காவில் மிகவும் குளிரான பிரதேசம். தனி மாநிலம். இன்னும் சொல்லப்போனால், அமெரிக்காவின் வரைபடத்தில் தனியாகவே காட்டப்படும். காரணம், அந்த மாநிலம், அமெரிக்க நிலப்பரப்பில் இருந்து சற்று விலகி, கானடா நாட்டிற்கு அப்பால் இருக்கிறது.

சுமார் 90 கிலோ மீற்றர் இடைவெளியில், பேரிங் ஜலசந்தி, ரஷ்யாவையும் அமெரிக்காவின் அலஸ்கா மாநிலத்தையும்பிரிக்கிறது. யாருக்கும்சொந்தமில்லாத அலஸ்கா பகுதியை ரஷ்யப் பேரரசு முதலில் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆனால், தொலைதூர தலைநகரில் இருந்து, பனிபடர்ந்த அந்த பகுதியை ஆளுமை செய்வது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. எனவே, 1867 ஆம் ஆண்டு. ரஷ்யா, அலஸ்கா பகுதியை, அமெரிக்காவிற்கு விற்பனை செய்தது.

அன்றைய மதிப்பில், அலஸ்காவின் விலை, 7.2 மில்லியன் அமெரிக்க டொலர். இன்றைய மதிப்பில், சுமார் 150 மில்லியன் டொலர். அதுவே, இலங்கை ரூபாவின் தற்போதைய டொலர் மதிப்பின் படி, 5,400 கோடி ரூபாவிற்கு சமம். அதாவது, அரசின் தற்போதைய வெளிநாட்டு கடன்களின் மொத்த மதிப்பில் மூன்று பங்கு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், அமெரிக்கா அலஸ்கா பகுதியை விலை கொடுத்து வாங்கும் போது, அதனை 'அமெரிக்காவின் முட்டாள்தனம்' என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறினர். ஆனால், முதலாம் உலகப் போர் நடந்து முடிந்த கடந்த நூற்றாண்டிற்கும் மேற்பட்ட உலகளாவிய அரசியல் மற்றும் பாதுகாப்பு கொள்கை மாற்றங்களை தொடர்ந்து, அலஸ்கா விற்பனை, 'ரஷ்யாவின் முட்டாள்தனம்' (Russia's Folly) என்று கூறும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

### தனி - நாடு வியாபாரிகள்

இன்று, இலங்கையில் விலை கொடுத்து, தனி நாடு உருவாக்கப் போவதாக வரும் செய்தியை, உள்நாட்டில் சில தமிழர்களாவது வரவேற்பார்கள் என்று கருதலாம். ஆனால், தனி நாடு கோரிக்கைக்கு, உள்நாட்டு தமிழர்கள், இதுவரை கொடுத்த விலை போதாதா? உயிர், மண், மானம், உணர்வு மற்றும் எதிர்காலம் அனைத்தையும் தொலைத்து விட்டு நிற்கும் மக்களிடம் கூற வேண்டிய விடயமா இது?

இன்றைய சூழலில், தமிழர் அரசியல் மற்றும் சமூக தலைமைகள், ஒன்றுபட்ட இலங்கையில் சமஷ்டி அதிகாரம் என்ற கோரிக்கையை முன்வைத்து, அது குறித்து நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் விவாதம் செய்து வருகிறார்கள். அப்போது, மீண்டும் தனி நாடு என்ற கோரிக்கை உள்நாட்டு தமிழர்களிடையேயே எடுபடுமா, என்ற கேள்வி எழுகிறது. அந்த கேள்விக்கான பதிலை அறிந்து கொள்ளாமலே, தங்களிடம் பணம் இருக்கிறது என்ற ஒரே ஆணவத்தில் இவ்வாறு தனி நாடு வாங்குகிறோம் என்று கூறுபவர்கள், யாருக்காக இதனைச் செய்கிறார்கள்?

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை குறித்த விவாதங்களின் முந்தைய சுற்றில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் தொழில் முதலீடு செய்ய தயாராயிருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. இன்று, மீண்டும் அதே சூழல் விவாதிக்கப்படுமேயானால், அத்தகைய முதலீடுகளை கூட தென்னிலங்கை தரப்புகள் சந்தேக கண்ணுடன் நோக்கும் நிலைமையை இந்த 'தனி நாடு வியாபாரிகள' தோற்றுவித்து விட்டார்கள்.

### பேசித் தீர்க்க வாய்ப்பு

தற்போதைய அரசியல் சூழலில், தென்னிலங்கை மக்கள் இனப்பிரச்சினையில் தமிழர் ஆதரவு நிலையை எடுப்பார்கள் என்று கருத இடமிருக்கிறது. எப்போது, விடுதலைப் புலிகள் சகாப்தம் முடிந்ததோ, அப்போதே, தலைநகர் கொழும்புவில் வாழும் சிங்கள அறிவுஜீவிகள் அவ்வாறு பேச துவங்கி விட்டார்கள்.

அவர்களுக்கு அப்பால் சென்று, தென்னிலங்கை சாமான்யர்களை, அதுவும் குறிப்பாக, சிங்கள பேரினவாதத்தில் திளைத்த கிராமப்புற மக்களை சென்றடைந்து, அவர்களிடம் உண்மை நிலையை உரைத்துரைக்க, தமிழர் தரப்பு முற்றிலும் தவறி விட்டது. அந்தப் பணியை செய்ய, சிங்கள அரசியல் தரப்புகளுக்கு அவசியமோ, அவசரமோ இருக்கவில்லை.

இந்தப் பின்னணியில், பொருளாதார வீழ்ச்சி காரணமாக, ஆளும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான நாடு தழுவிய அமைதி போராட்டம், சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களை ஒன்று சேர்த்துள்ளது உண்மை. இந்த அரவணைப்பு மூலம், மூன்று தரப்பினருமே தங்களுக்கு இடையே உள்ள சந்தேகங்களையும், பயங்களையும் பேசித் தீர்த்துக் கொள்ள வாய்ப்புத் தோன்றியுள்ளதாக அவதானிக்கப்படுகிறது.

இதற்கிடையே, தற்போது, தனி நாடு, அதற்கு ஒரு டொலர் விலை என்று புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு தரப்பினர் பேசுவாரேயாயின், அது மீண்டும், இல்லாத சந்தேகங்களைத் தோற்றுவிக்கும். இதில் பிரச்சினையே, தனி நாடும் கிடைக்கப் போவதும் இல்லை, அதற்கு பதிலாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் அதிகார பரவல் கூட சந்தேகத்திற்கு இடமாகி விடும்.

### இரண்டாவது சுதந்திரம்'

நாட்டை துண்டாடும் எல்லாவித முயற்சிகளையும், தென்னிலங்கை அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக எதிர்க்கும். ஆட்சியாளர்களும் அத்தகைய முடிவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். குறிப்பாக, இராணுவம் அத்தகைய எல்லாவித ஆலோசனைகளையும், அடிமட்டத்திலிருந்து மேலிடம் வரை, வலிமையாக எதிர்க்கும்.

அவர்கள் அனைவரையும் பொறுத்தவரை, இனப்போர் வெற்றி என்பது நாட்டின் 'இரண்டாவது சுதந்திரம்' அதன் பயனை இழக்க அவர்கள் யாருமே தயாராக இல்லை. அதாவது, நாடும் நாட்டின் எந்தவொரு பகுதியும் ஏதோ இத்தனை ஏக்கர் நிலம் என்று, விலைக்கு வருவது போல் அல்ல. தனி மனித காணி உரிமை, தமிழர்கள் சார்ந்த பிரச்சினைதான். ஆனால், நாட்டின் ஒரு பகுதி என்று வரும் போது, அதோடு ஒட்டி, நாட்டின் இறையாண்மை என்று வந்து விடும். தற்போதைய சூழலில், தமிழர் தரப்பில் எத்தனை பேர் அந்தகைய நிலைமையை விரும்புவார்கள், ஏற்றுக்கொள்வார்கள்?

தமிழர்களுக்கு தனி நாடு கொடுப்பதாக இருந்தால், தென்னிலங்கை சமுதாயமும், கொழும்பு அரசு அமைப்பும், இத்தனை வருடங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு போராடி இருக்கமாட்டார்களே. அதோடு நில்லாமல், இனப்போராட்டத்திற்கு முன்பே, நாட்டின் இறையாண்மையைத் தகர்க்க நினைத்தமைக்காக, ஜே.வி.பி. தலைமையிலான இரண்டு, தென்னிலங்கை தழுவிய கிளர்ச்சிகளையும், அரசு அடக்கி, வெற்றியும் கண்டது.

அதில், இரண்டாவது கிளர்ச்சியின் போது, 1987 – 89 காலப்பகுதியில், அறுபதாயிரம், சிங்கள இளைஞர்கள் மற்றும் யுவதிகளை, இராணுவம் கொன்று குவித்ததும் நினைவில் கொள்ளப்பட வேண்டிய விடயம். அதாவது, நாட்டின் இறையாண்மை என்று வந்து விட்டால், தமிழராவது, சிங்களவராவது!

### சர்வஜன வாக்கெடுப்பு

தமிழர்களுக்கு தனி நாடு, அதற்கு ஒரு பணப்பேறு என்று வந்து விட்டால், கிழக்கு வாழ் முஸ்லிம்கள் என்ன இளைத்தவர்களா? இனப்பிரச்சினைக்குஎந்தவொரு முடிவு வந்தாலும், குறிப்பாக கிழக்கு மாகாணம் சார்ந்த பேச்சுகளில், முஸ்லிம் தரப்பும் சரிநிகர் பங்காளிகள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அவர்களுக்காக, மீண்டும், மீண்டும் முடிவெடுக்க, தமிழர் தரப்பிற்கு, அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்களுக்கு, யார் அதிகாரம் வழங்கியது?

எது எப்படியோ, நாட்டின் எந்தவொரு பகுதியையும் துண்டாட வேண்டுமென்றால், அது சமாதான வழியில் செய்யப்பட வேண்டுமென்றால், தற்போதைய அரசியல் யாப்பின் அடிப்படையில், சர்வஜன வாக்கெடுப்பு கட்டாயம் ஆகலாம். அத்தகைய வாக்கெடுப்பின் முடிவு எவ்வாறு அமையும் என்பது குறித்து, புலம்பெயர்ந்தோர் அறியாதது அல்ல. அப்படியென்றால், ஏன் இந்த வெத்து வேட்டு?

### முறுகல் போக்கு

மேலும், எப்போது, நாட்டிற்கோ, நாட்டின்பகுதிக்கோஒருவிலை, என்றநிலைமை ஏற்பட்டுவிட்டால், அதில், அதிக விலை கொடுப்போருக்கே, வியாபாரம் படியும். அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் ஆதரவு புலம்பெயர்ந்தோர் அமைப்பு ஒன்று, நாட்டிற்கு விலை வைக்கும் என்றால், இன்று நிலவும் சர்வதேச அரசியல் சூழலில், திடீரென்று சீனா ஆதரவு அமைப்போ, அல்லது ரஷ்யா ஆதரவு அமைப்போ, புற்றீசல் போல் தோன்றி, ஏலத் தொகையை அதிகரித்துக் கொண்டே போகலாம். என்ன, இலங்கை அரசிற்கு மட்டும், இந்த 52 பில்லியன் டொலர்களுடன் தற்போதைய பொருளாதார நெருக்கடி தீர்ந்து விடுமா, என்ன?

கடந்த பல மாதங்களாக நிலவும் உணவு, பெற்றோலிய பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் டொலர் தட்டுப்பாடு போன்ற பல்வேறு பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு, அண்டை நாடான இந்தியா மட்டுமே உதவி செய்து வருகிறது. மனித உரிமை குறித்து குறை கூறும் மேலை நாடுகள் எதுவுமே, எந்த வித உதவியும் இதுவரை செய்ய வில்லை.

(08ஆம் பக்கம் பார்க்க)

# புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை பலப்படுத்தவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை நாட்டில் இன்னமும் பலப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் –

இந்த நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கான கட்டமைப்பை இன்னமும் பலப்படுத்த வேண்டும்.

இதனை அதிகரிக்க வேண்டும். இதற்கு எதிர்க்கட்சி எனும் வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவே உள்ளோம்.

நாட்டின் எதிர்காலம் சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்தியை இலக்காகக் கொண்டே பயணிக்க வேண்டும்.

டீசல் மற்றும் நிலக்கரியூடான மின்சார உற்பத்திக்கு அதிக செலவேற்படுவதை நாமும் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அரசாங்கம் டீசல் மாபியா ஒன்று இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு இதனை முற்றாக இல்லா தொழிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஊடாக போட்டித்தன்மை இல்லாது போனால், ஊழல் வாதிகளுக்கும் மோசடியாளர்களுக்கும் அதிக நன்மை ஏற்படும்.

எனவே, இதற்கு நாம் ஒத்துழைப்பை வழங்க முடியாது. நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் – வாங்கல்களுக்கு நாம் என்றும் இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்தார்.




## மன்னார் அச்சங்குளம் பகுதியில் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை 11 மணியளவில் சுனாமி ஒத்திகை நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அச்சங்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம், அருகங்குன்று போன்ற கடற்கரையோர பிரதேசங்களில் எதிர்காலத்தில் சுனாமி தொடர்பான அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது மேற்படி அனர்த்தங்களில் இருந்து மக்களை விழிப்பூட்டுவதற்கும் அது சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமான ஒத்திகை நிகழ்வு நேற்றுக் காலை 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலகம், மன்னார் பிரதேச செயலகங்கள், இராணுவம், பொலிஸ், வேல்ட் வின், அனர்த்த முகாமைத்துவ பிரிவு சென் ஜோன் அம்புலன்ஸ், செஞ்சிலுவை சங்கங்கள் உட்பட பல நிறுவனங்கள் இணைந்து குறித்த ஒத்திகை நடவடிக்கையை மேற்கொண்டன.

இதன் போது மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேச செயலாளர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார், உட்பட வைத்தியர்கள், உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் மேற்படி குறித்த சுனாமி ஒத்திகை நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றில் தொலைபேசிகளை எம்.பிக்கள் பயன்படுத்த வேண்டாம்!

நாடாளுமன்றத்தில் தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சபை உறுப்பினர்கள் தொலைபேசிகளை பயன்படுத்துவதால் மற்றவர் பேசுவது கேட்பது இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.




## யாழ்., கொழும்பு இந்துக்கள் மோதும் விவாதச் சமர் போட்டி இன்றைய தினம்!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக்கல்லூரி ஆகியவற்றின் விவாத அணிகள் மோதிக்கொள்ளும் விவாதச் சமர் இன்று (வெள் ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்கத் தயாராகவேண்டும் என்ற தலைப்பில் ஓர் அணியினரும் இல்லை (ஏற்கக் கூடாது) என்று மறு அணியினரும் சொல்லாடல் விவாதத்தில் ஈடுபட உள்ளனர்.

அரசியல், விவாத ஆர்வலர் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ததன் பின்னர் மஹிந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை

### நாமல் கூறுகிறார்



பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்தமையைத் தொடர்ந்து, எந்த அமைச்சரவைக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

திங்கட்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள நாமல், அமைச்சரவைக் கூட்டங்களில் அவர் கலந்துகொள்ளவில்லை என்றும் அவ்வாறு அவர் கலந்துகொள்வார் என்று தான் நம்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் எப்போதும் நாட்டின் ஜனநாயக அமைப்பின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர் என்பதோடு, எப்போதும் அதை மதிப்பவர் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஏன் இந்த .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில், ரஷ்யா மட்டுமே, 70 மில்லியன் டொலர் பெறுமதி உள்ள 90,000 தொன் மசகு எண்ணெயை இலங்கைக்கு கொடுத்து உதவியது. இது சர்வதேச சந்தையை விட 35 சதவீதம் குறைந்த விலை என்று கூறப்பட்டது. மேலும், இத்தகைய உதவிகளை வழங்குவதற்கு ரஷ்யா தயாராக இருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன. ஆனால், அது குறித்து இலங்கை தரப்பிடமிருந்து, இன்னமும் எந்தப் பதிலும் இல்லை என்றும் தெரிகிறது.

ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணை வந்து சேர்ந்த அடுத்த நாள்களில், கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில், ரஷ்யாவின் பயணிகள் விமானம் ஒன்று, 'சிறைப்படுத்தப்பட்டது', இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் முறுகல் போக்கை தோற்றுவித்துள்ளது. ரஷ்ய பயணிகள் விமான விடயத்தில் கொழும்பு வணிக நீதிமன்றம், தொடர்ந்து அரசு தரப்பிற்கு இந்த வழக்கில் பங்கு இல்லை என்று அடித்து கூறியது சில -பல சந்தேகங்களை தோற்றுவித்தது. அந்த விமானத்தை விடு தலைசெய்து உத்தரவு பின்னர் வந்துள்ளது. என்றாலும், பாழ்பட்ட இரு நாட்டு உறவை சீர்படுத்த நேரம் பிடிக்கும்.

இலங்கையின் ரஷ்ய உறவு மிகவும் சீரான பாதையிலேயே பயணித்து வந்துள்ளது. ஆனால், தற்போது நடந்து வரும் உக்ரைன் போரில், ரஷ்யாவை தனிமைப்படுத்தும் அமெரிக்கா தலைமையிலான மேலை நாடுகளின் வலையில், இலங்கையை சிக்க வைக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. அண்டை நாடான இந்தியாவில் மனித உரிமை மீறல்கள் என்று அமெரிக்க வெளியுறவு செயலர் அந்தோணி பிளிங்கன் கூறுவது எல்லாம், ரஷ்யாவை தனிமைப்படுத்தும் விடயத்தில், புது டெல்லி முழு ஒத்துழைப்பு வழங்காத தன் விளைவே.

இந்தப் பின்னணியில், ரஷ்யா விமானம் குறித்த இலங்கை விவகாரத்தில், மேலை நாடுகளின் கை இருப்பதாக அந்த நாடு கருதினால் வியப்பு இல்லை. அதிலும் குறிப்பாக, மேலை நாடுகளின் நண்பன் என்று கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருப்பது, அத்தகைய சந்தேகங்களுக்கு வலுச் சேர்க்கும். இதற்கிடையில், பைடன் ஆதரவு தமிழர்கள் போன்ற அமைப்புகளின் பெயர் அடிபடுமேயானால், அதனால், இலங்கைக்கும் இங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் அன்றாட பிரச்சினைகள் அதிகமாகுமே தவிர, அதனால் அரசியல் பிரச்சினைகள் எதற்கும் தீர்வு கிடைக்கப்போவ தில்லை.

காரணம், எப்போது அமெரிக்க ஆதரவு தமிழர்கள், இங்குள்ள பரந்த நிலபரப்பை விலை கொடுத்து வாங்குவதற்கு முயல்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறதோ, அப்போதே, இங்கு ஒரு அமெரிக்க படை தளம் அமையும் என்றும் கதைகள் கட்டப்படும். அதனை வருமுன் காப்பதாக நினைத்துக் கொண்டு, சீனா போன்ற நாடுகள், இப்போதே குழம்பியுள்ள குட்டையில், விலாங்கு மீனையே பிடிக்க முயற்சி செய்யும்.

**விற்பனையா, குத்தகையா?**

இலங்கையின் ஒரு பகுதியை விற்கவில்லை என்றாலும், அதனை தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்கு அடகு வைக்கும் முடிவை, அம்பாந்தோட்டை விடயத்தில், முந்தைய ரணில் அரசே எடுத்தது. அதற்கு அப்பால் சென்று, சீனாவிடம் இலங்கை நிலப்பரப்பை குத்தகைக்கு விடலாம் என்றால், அதனை புலம்பெயர் தமிழர் தரப்பிற்கு அது போன்ற வகையில் தமிழர் தரப்பிற்கு குத்தகைக்கு விட்டால் என்ன, என்ற கேள்வி கூட எழலாம்.

இது போன்ற ஒரு ஏற்பாட்டினை, தமிழர் தரப்பிற்கும் செய்து கொள்ளலாம் என்று கூட ஆலோசனைகள் எழலாம். எவ்வாறு கொழும்பு துறைமுக நகர திட்டத்தில் (Colombo Port City) சீனாவிற்கு தனி உரிமைகள் வழங்கப்பட்டதோ, அது போன்ற உரிமைகள் தமிழர் பகுதிகளுக்காக டொலர் கொடுக்கும் அமைப்புகளுக்கும் கொடுக்கலாம், என்பது போன்ற கருத்துகள் கூட பரவலாம்.

புலம்பெயர் தமிழர் அமைப்புகள் பல உள்ளன. அவர்கள் மத்தியில் கொள்கை ரீதியான முறுகல் போக்கும் உள்ளது. இவர்களுக்காகப் பரணிபாடும் குழுக்களும் உள்நாட்டில் உள்ளன. இந்த பின்னணியில், புலம்பெயர்ந்தோருடையே இருக்கும் சண்டையும் சச்சரவும் கூட உள்நாட்டில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். முன்னர், விடுதலைப் புலிகள் காலத்தில், கருணா அம்மான் தலைமையில், கிழக்கு மாகாண பிரிவினர் தனித்துச் சென்றமையை, நினைத்துப்பார்க்க வேண்டும்.

இவ்வாறு, அமெரிக்க அமைப்பு ஒன்று, தமிழர் பகுதிகளுக்கு விலைபேச தயாராக இருப்பதாக வரும் செய்திகள் உண்மையோ, பொய்யோ, அதன் அடிப்படையில் எழும் கேள்வியும், சந்தேகமும், பயமும், நிஜம். எனவே, அவை குறித்த புரிதல்களும், அவற்றின் அடிப்படையிலான முடிவுகளும் இலங்கை வாழ் தமிழர் தரப்பிடம் தயாராக இருக்க வேண்டும்.

அதாவது, இனப்பிரச்சினையில், உள்நாட்டு தமிழர்களுக்கு, புலம்பெயர்ந்தோர் ஆதரவு தேவை. ஆனால், அதற்காக, அவர்களே நேரடியாக இடைபட முடியாது. அதனால், இடர்கள் தோன்றுமே தவிர, என்றுமே நல்ல முடிவு தோன்றாது. இந்த முடிவில், இங்குள்ள தமிழர் தரப்புகள் உறுதியாக இருக்க வேண்டும். தங்கள் முடிவை உறுதியாக வெளிப்படுத்தவும் வேண்டும்!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# கிராமிய வழிபாடு பற்றி ஒரு கண்ணோட்டம்

கிராமிய வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். இந்தச் சிறு தெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, ஊர்த் தெய்வ வழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ விதிமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலங்காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப்படுகின்றன. இந்தத் தெய்வங்களின் வழிபாடானது கிராம மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும் அவர்களின் முன்னோர் கற்றுத் தந்த முறைப்படியும் நடக்கிறது.

உலகின் தொன்மையான வழிபாடானது இயற்கையை வழிபடுவதாகவும் அதற்கு அடுத்ததாக சிறு தெய்வங்களை வழிபாடு செய்ததாகவும் முனைவர் து. தியாகராசன் கூறுகின்றார். சிறு தெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது என்றும் நாட்டுப்புற தெய்வ வழிபாடு எல்லாம் முன்னோர் வழிபட்ட வழியே கடைப்பிடிக்கப்படுகின்றது எனவும் கூறுவர்.

*** வீட்டுத் தெய்வ வழிபாடு**

நாட்டுப்புற மக்கள் தங்கள் வழிகாட்டிகளாக வாழ்ந்து மறைந்தவர்களையோ அல்லது வீட்டில் இருந்த மூதாதைகளையோ அல்லது விபத்தில் இறந்த கன்னிப் பெண்களையோ வணங்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வணங்கும் முறையே வீட்டுத் தெய்வ வழிபாட்டு முறை எனப்படும்.

*** குல தெய்வ வழிபாடு**

ஆரம்ப காலங்களில் இந்த நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வ வழிபாடாக மாறியது எனலாம். குலம் என்பது குறிப்பிட்ட மூதாதையரின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழு அமைப்பாகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக கருதப்படுவர். தன்குலத்தின் முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களையும் உயிர்த்தியாகம் செய்தவர்களையும் தெய்வமாகப் பாவித்து வணங்கி வழிபட்டனர். இவ்வழிபாடானது ஒவ்வொரு குலத்திற்கும் மாறுபட்டதாக அமைகின்றது.

*** இனத்தெய்வ வழிபாடு**

பல்வேறு குழுவினரை சார்ந்தவர்கள் ஒரே இனமாக நின்று வணங்கும் முறையை இனத்தெய்வ வழிபாடு என்று அழைப்பர்.

*** ஊர்த்தெய்வ வழிபாடு**

ஊரில் உள்ள மக்களை காக்கும் தெய்வங்களை வணங்கும் வழக்கத்திற்கு ஊர்த் தெய்வ வழிபாடு என்று பெயர் கொள்ளப்படுகிறது. பெரும்பாலும் காவல் தெய்வங்களையே இந்த ஊர்த் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன.

**★ வெகுசனத் தெய்வ வழிபாடு**

சாதி, மதம், இனம் என்கின்ற வேறுபாடுகளைக் கடந்த தெய்வ வழிபாட்டிற்கு வெகுசன தெய்வ வழிபாடு எனப் பெயர் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, சமயபுர மாரியம்மன், கோட்டைமாரியம்மன், ஐயனார் போன்ற முதலில் சிறு தெய்வ வழிபாடாக இருந்து வெகுசன தெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றவையாகும்.

**★ சடங்கு முறைகள்**

பல்வேறு குலம், இனம், மொழி என்ற பாகுபாடு இருப்பதால் எண்ணில் அடங்காத சடங்குகளைக் கொண்டதாக சிறு தெய்வ வழிபாடு காணப்படுகிறது. இந்த சிறு தெய்வ வழிபாட்டோடு இந்து சமய சடங்குகள் பல பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக பலியிடுதல், ஆணி செருப்பணிதல், சூரைக் கொடுத்தல், கோழிக் குத்துதல் போன்ற சடங்குகள் சிறு தெய்வ வழிபாட்டுக்குரியவை.

இவ்வாறாக கிராமிய தெய்வ வழிபாட்டுச் சிறப்புக்களைக் காணமுடிகின்றது. ஆரம்ப கால தனி மனித ஒழுக்கத்திற்கு வித்திட்டது கிராமிய தெய்வ வழிபாடு எனலாம். இவ்வழிபாடானது பல பிரிவுகளாகக் காணப்பட்டாலும் ஒழுக்கநெறிக் கொள்கைகள் வழிபாட்டிற்குள் புகுத்தப்பட்டதனைக் காண முடிகின்றது.

**திருமதி அஜிதா கோபிநாத்**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர் -**
**இந்து கலாசாரம்,**
**சங்கானை. பிரதேச செயலகம்)**

# பதிகக் கருத்து



**மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்**
**பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்**
**குறையுடையார் குற்றம்ஓராய் கொள்கையினால் உயர்ந்த**
**நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.**

பொருள் :

வேதமே வடிவானவனும் வேதத்தை உடையவனாகவும் (தட்ஷணாமூர்த்தியாக கையிலே கொண்டவனும்),வேதமே உடையாகவும் (தேவர்களும், முனிவர்களும், உனைப்பணிந்து ஓதி, ஓதி அந்த மந்திர ஒலியின் அதிர்வுகளை உடைபோல் கொண்டவனும்), இடையில், முன்புறம் புலியின் வரித்தோலையும் பின்புறம் கரடியின் தோலையும் மார்பின் மேலே யானையின் தோலையும் அணிந்திருப்பவனும் (ஆபிசார ஹோமம் செய்து உன்னை அழிக்கவென முனிவர்கள் ஏவியவற்றை அழித்து அவற்றின் தோலுரித்து அணிந்துகொண்டு உன் இந்தச் செயலை, உலக மக்கள் எண்ணித் துதிக்கவென அடையாளங்களாய் காட்டி உணர்த்துபவனும்), குற்றம் செய்து சாபம் பெற்றுச் சரணம் என்று வந்த சந்திரனின் குற்றத்தை மன்னித்து அடைக்கலம் தந்தேன் என்று தூக்கி எடுத்து நாளும் வளரும் உன் சடையில் அவனை வளர விட்டவனும், பிஞ்சு போன்ற மென்மையான குழந்தையுள்ளம் போன்ற அகத்தைக் கொண்டவனும், (சித்தர் வாக்கு) அகம், புறம் என்று இல்லாதவனும், வினைப்பயனால் இப்போது இப்படியெல்லாம் தோத்தரிக்காதவர்களின் குற்றங்களை மன்னித்து இறுதியில் அணைத்துச் சேர்க்கும், இறைவனாகிய உன்னையல்லாது, வேறு தெய்வத்தை வணங்காத உறுதியும், அனைத்து உயிரிலும் உன்னையே கண்டு அன்பு செய்யும் பெருஞ்சிறப்புற்ற கொள்கையை கைக்கொண்டு உயர்ந்த வாழ்க்கை வாழும் நிறைகுடம் போன்ற அடியார்களின் இடர்களையெல்லாம் களைந்து பேரானந்தத்தை அள்ளி வழங்குவாய் எங்கள் அப்பனே, அருட்பெருஞ்சோதியே திருநெடுங்களம் வாழும் எங்கள் இறைவனே.

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து....)**

# பரிகாசம் வேண்டாம்!

பிறருடைய நடை, உடை, தோற்றம் முதலியவற்றிலே காணப்படும் குறைகளை எடுத்துப் பேசி அவர்களைப் பழித்தலாகாது.

குருடர், முடவர், செவிடர், உறுப்புக் குறைந்தவர், தரித்திரர், தீரா வியாதியாளர் முதலியோரைக் கண்டால், அவர்களுடைய துரதிஷ்டத்தைக் குறித்து இரங்கி, அவர்களுக்குத் தங்கள் தங்களால் ஆன சகாயஞ் செய்வதுஅன்றி, அவர்களை ஒரு போதும் பழித்தலாகாது.

ஆன்மாக்கள் செய்யும் நல்வினை, தீவினைகளின் பயனாக முறையே சுகதுக்கங்கள் வருதல் நிச்சயமென்பதையும், தன்னிலும் அழகு, செல்வம் முதலியவற்றினாலே பெரியராயிருப்பாரையும் ஒருவன் நினைப்பானாயின் பணங்குணம் உண்டாகமாட்டாது.

பிறரைப் பரிகாசம் பண்ணித் திரிபவன், தன் காலத்தையுங் கருத்தையும் வாக்கையும் வீணடிக்கப் போக்கிப், பலராலும் பகைக்கப்பட்டுப் பொல்லாதவனாகின்றான்.

ஒருவனுக்கு மற்றைய பகைகளெல்லாம் தன் பிரயோசனத்தை அல்லது பிறர் பிரயோசனத்தைக் குறித்த தொழில் முயற்சி முதலியவைகளினாலே வரும். பிறரைப் பரிகாசம் பண்ணுபவனுக்கோ, அவை இரண்டுமின்றி, வீணாக அப்பகை தானே வந்தடையும்.

பரிகாச வார்த்தையை வாக்கினால் வருங்குற்றங்களுள் ஒன்றாக வைத்து அறிவுடையோர் இழித்துச் சொல்லுவர். மிக இழிவுள்ள பொய்யும்



ஒருவேளை மனிதர்களுக்குச் சில நன்மைகளைப் பயக்கும். பரிகாசமானது முன்னுள்ள நன்மைகளைப் பயக்காது. பரிகாசமானது முன்னைய நன்மைகளையும் கெடுத்துத் தீமைகளையே பயந்துவிடும். சில பிள்ளைகள், பொழுதுபோக்கும் விளையாட்டாக ஒருவரையொருவர் பரிகாசம் பண்ணி வீண்காலம் போக்குகின்றார்கள். அவர்கள், அதனால் வரும் பயன் என்ன என்பதைச் சிறிதே உற்று நோக்குவார்களாயின், அதனால் விளைவது பகையும் பழியுமே என்று நன்கு தெரிந்துகொள்வார்கள்.

தமக்கென வேறொரு தொழில் முயற்சியும் இல்லாத சோம்பேறிகளே பரிகாசத்தைத் தங்கள் சினேகம் போலக் கொண்டாடுவர். ஒரு பயனுமின்றிப் பிறர்க்குக் குற்றஞ் சொல்லி நகைப்பவர்களைக் கண்டாற் கொலை செய்வோரைக் கண்டு அஞ்சி நீங்குதலைப் போல அஞ்சி அகலப்போதலே அறிவுடைமைக்கு அழகு.

**(இந்து கலாசார திணைக்கள**
**வெளியீட்டிலிருந்து.......)**



# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன - தனதான**

**திக்குத்திசை யற்றுத் தொழுபவ ரிட்டப்படி கிட்டச் செயவல**
**சக்திக்கொரு முத்துப் பதியெனு - நல்லூரில்**
**எத்திக்கும திக்கப் பணியவை தித்தித்திடு திட்டத் தொடுபுரி**
**சித்தத்தொடி ருக்கத் திருவருள் - புரிவேலா**
**முத்திக்கொரு வித்தைத் தரவல பத்திச்சரம் வைத்துப் பணியெனை**
**முற்பட்டிட வைக்கத் திருவருள் - தருவோனே**
**முக்கட்பர மற்குச் செவியுரை பக்திப்பத முற்றுப் பலரடை**
**முற்றத்தினி லுற்றுக் கிடவென - அருளாயோ?**
**திக்குத்தலை வைத்துத் திரிபிர மற்குப்பொருள் வைக்கத் தவறிடு**
**பித்துத்தலை குட்டிச் சிறையிடு - வடிவேலா**
**சித்தத்திடை வைத்துப் பதமதை நத்தித்தொழ ருக்குக் குளமுள**
**சித்தித்திட பற்றிற் றிடுவழி - தருகோனே**
**மிக்கப்பிற விக்குப் படரெமை பட்சத்தொடெ டுத்துக் கதியது**
**மெத்தத்தரு மட்டப் பயிரவர் - தொழுவேலா**
**மெச்சக்கர சக்திச் சரமதை பற்றித்தொழ வைத்துக் குறைவற**
**முத்துப்பதி யுற்றுற் றருளிடு - பெருமானே**

**- கவிஞர் இராசையா குகதாசன் -**

**செவ்வழி நயனத்திற்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்**
**sevvalinayanamgmail.com**
**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.**



# 2க்கு மேல் வேண்டாம்; ஒன்றே போதும் என்ற சீனா இப்போது மூன்றாம் குழந்தைக்குத் தூண்டுகின்றது


மக்கள்தொகை வளர்ச்சியில் சீனா எதிர்மறையான சூழ்நிலையை எதிர் கொண்டுள்ளதால், அரசாங்கம் அதன் குடிமக்களை சீக்கிரம் திருமணம் செய்து கொண்டுதலா மூன்று குழந்தைகளையா வது பெற வேண்டும் என்று கட்டாயப்படுத் தத் தொடங்கியுள்ளது.

அரச நிர்வாகமும் மக்களை இது விட யத்தில் தூண்டும் விதத்தில் – தூண்டில் போடும் விதத்தில் – பல்வேறு போட்டிக ளைக் கூட நடத்தத் தொடங்கியுள்ளது.

கொவிட் தொற்றையடுத்து கட்டாய தனிமைப்படுத்தல்கள் மற்றும் முடக்கங் கள் காரணமாக தங்கள் சொந்த வாழ்க்கை மிகவும் அழுத்தத்தில் இருப்பதால், தங் கள் குழந்தைகளின் நல்வாழ்வைக் கவ னிக்கப் போதுமான நிதிப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று பெரும்பாலான பெற்றோர்கள் கூறுவ தால், குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கு கடுமையான எதிர்ப்பு வருகிறது.

வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடக் கும் விரக்தி, உணவுப் பற்றாக்குறை, வரு மானமின்மை, விலைவாசி உயர்வு, உடல்நலப் பிரச்சினைகள் போன்றவை, நாட்டு மக்களிடையே ஏமாற்றத்தை ஏற் படுத்தியுள்ளன என்று 'ஹொங்கொங் போஸ்ட்' தெரிவித்துள்ளது.

அதிக குழந்தைகளைப் பெற்றுக்




கொள்ளும்படி தங்கள் மீது அதிகரித்து வரும் உத்தியோகபூர்வ அழுத்தத்தால் பெரும்பாலான குடிமக்கள் கிளர்ச்சிய டைந்துள்ளனர் என்பதை சீன அரசாங் கம் உணரத் தொடங்கியுள்ளது என்று அது மேலும் கூறியது.

சீனாவின் தேசிய புள்ளியியல் பணிய கத்தின் படி, 2013 மற்றும் 2019 க்கு இடைப்பட்ட ஆறு வருட காலப்பகுதியில், சீன திருமணங்களின் எண்ணிக்கை 41 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 7.6 மில்லியன் ஜோடிகள் மட்டுமே திரும ணத்திற்கு பதிவு செய்துள்ளனர். இது கடந்த 36 ஆண்டுகளில் இல்லாத குறைந்த அளவாகும். இதன் விளைவாக, சீனாவின் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 7.5 குழந்தைகளாக குறைந்துள்ளது.

ஒன்பது மாகாணங்கள் மற்றும் பிராந் தியங்கள் எதிர்மறையான மக்கள்தொகை வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன என அறிக்கை மேலும் கூறியுள்ளது.


சீனர்கள் அதிக குழந்தைகளைப் பெறுவதை எதிர்க்கும் மற்றொரு முக்கிய மான பிரச்சினை என்னவென்றால், கம் யூனிச தேசம் 'ஒரு குழந்தைக் கொள் கையை' கடுமையாக நடைமுறைப்படுத்தி யபோது தாங்கள் அல்லது அவர்களின் பெற்றோர்கள் அனுபவித்த வலி மற்றும் சித்திரவதைகளை அவர்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

கட்டாயக் கருக்கலைப்பு என்பது அன் றைய வரிசையாக இருந்தது, பெண்கள் எப்போது கர்ப்பம் தரிக்க முடியும் என் பதை அரசாங்கம் தீர்மானித்தது, திரு மணமான தம்பதிகளை தொடர்ந்து கண் காணிப்பில் வைத்தது, மேலும் இரண்டா வது குழந்தைக்காகச் சென்றவர்களுக்கு அபராதம் மற்றும் சிறைத்தண்டனையும் விதித்தது.

அந்த நேரத்தில் லட்சக்கணக்கான கருக்கலைப்புகள் மேற்கொள்ளப்பட்டு மக்களின் நம்பிக்கையை அரசாங்கம் இழக்கச் செய்தது.

மேலும், தம்பதிகள் அதிக குழந்தை களைப் பெறுவதை எளிதாக்குவதற்கு அரசாங்கம் எந்த கொள்கை மாற்றத் தையும் கொண்டு வரவில்லை என்றும் சீனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இப் போது, அரசாங்கம் அதிக குழந்தைகளை விரும்பும் போது, மக்கள் விரும்பவில்லை.

மக்கள்தொகை வீழ்ச்சி நெருக்கடி யால் கவலை கொண்டுள்ள அரசாங்கம் அதைச் சமாளிக்க அதிக குழந்தைகளின் அவசியத்தைப் பற்றி இருவழி தகவல் தொடர்பு மூலம் நம்பிக்கையை உரு வாக்க இப்போது முயற்சிக்கிறது என ஆதா ரங்களை மேற்கோள் காட்டி ஹொங் கொங் போஸ்ட் தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக அரசாங்கம் பல போட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது, ஆனால் அரசாங்கத்திற்கு நேரம் கடந்து விட்டதால் பதில் உற்சாகமாக இல்லை.

பிறப்பு விகிதம் தொடர்ந்து குறையும் பட்சத்தில், சீனாவில் இளைஞர்களின்



எண்ணிக்கை குறைந்து வருவதால், வரும் ஆண்டுகளில் தொழிலாளர் எண் ணிக்கையும் வெகுவாகக் குறையும்.

மேலும், சீனப் பெண்களின் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் கார ணமாக, அவர்கள் திருமணம் செய்து கொள்ளும் நாட்டம் ஆண்களை விட குறைவாக உள்ளது. கடந்த ஆண்டு, பெய்ஜிங் ஒரு புதிய மக்கள்தொகை மற் றும் குடும்பக் கட்டுப்பாடு சட்டத்தை வெளி யிட்டது, இது சீன தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகளைப் பெற அனுமதிக்கிறது. அதிகரித்து வரும் செலவுகள் காரண மாக தம்பதிகள் கூடுதல் குழந்தைகளைப் பெற விரும்பாத நிலையில் அவர்களை வெளிப்படையாகச் சமாளித்து தாஜா பண்ணப் பார்க்கிறது இந்தச் சட்டம்.

'ஏ.என்.ஐ.' வெளியிட்ட தகவல்கள் இவை.

'த கார்டியன்' தரும் தகவல்கள்


அதே நேரம் 'த கார்டியன்' சில தகவல் களை புள்ளிவிவரங்களாக வெளியிட்டி ருக்கின்றது.

சீனாவின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் ஆறு தசாப்தங்களில் மிகக் குறைந்த நிலைக்குச் சரிந்துள்ளது. மக் கள்தொகை வளர்ச்சியை அதிகரிக்கவும், மக்கள்தொகை நெருக்கடியைத் தடுக்க வும் அரசாங்கத்தின் முக்கிய முயற்சிகள் இருந்தபோதிலும், 2021 இல் இறப்பு எண்ணிக்கையை விட பிறப்பு எண் ணிக்கை வீதம் அதிகரிப்புக் குறைவாகவே உள்ளது.

சீனா முழுவதும், 2021 ஆம் ஆண் டில் 10.62 மில்லியன் குழந்தைகள் பிறந் துள்ளன. இது ஆயிரம் பேருக்கு 7.52 என்ற விகிதத்தில் எனத் தேசிய புள்ளி யியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதே காலகட்டத்தில் 10.14 மில்லியன் இறப்புகள் பதிவாகியுள்ளன. இறப்பு விகி தம் ஆயிரத்திற்கு 7.18. அதன்படி மக் கள் தொகை வளர்ச்சி விகிதம் ஆயிரம் மக்கள் தொகையில் 0.34 மட்டுமே.

வளர்ச்சி விகிதம் 1960 க்குப் பிறகு மிகக் குறைவாக உள்ளது, மேலும் கடந்த மே மாதத்தின் ஒரு தசாப்தத்திற்கு ஒரு முறை மக்கள்தொகை கணக்கெடுப்பின்




கண்டுபிடிப்புகளை சேர்த்தது, இது 2000 முதல் 2010 வரை பதிவாகிய 0.57% இலிருந்து 0.53% சராசரி ஆண்டு உயர்வைக் கண்டறிந்தது.

சீனா, கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதியைப் போலவே, மக்கள்தொகை நெருக்கடியின் பிடியில் உள்ளது, பிறப்பு விகிதம் குறைகிறது. மற்றும் உடனடி எதிர்மறையான மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் வயதான மக்கள்தொகை பற்றிய கணிப்புகள். இப்போதைய புள்ளி விவ ரங்கள் சீனாவில் 60 வயதிற்கு மேற்பட்ட வர்களின் விகிதம் 2020 இல் 18.7 வீதத் தில் இருந்து 18.9 வீதமாக உயர்ந்துள் ளது.

மக்கள்தொகை சவால்கள் நன்கு அறியப்பட்டவை. ஆனால் மக்கள் தொகை வயதான வேகம் எதிர்பார்த்ததை விட தெளிவாக வேகமாக உள்ளது என்று பின்பாயின்ட் அசெட் மேனேஜ்மென்ட் டின் தலைமை பொருளாதார நிபுணர் ஷிவேய் ஜாங் கூறினார்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -30**

இந்தப் பின்னணியில் புலம்பெயர் தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் கடன் தொகையான 52 பில்லியன் டொலர்



களையும் தந்து தமது பொருளாதார இக்கட்டுகளை நீக்கி விடுவார்கள் என்ற செய்திகளும் வெளிப்படுகின்றன.

தொடக்கத்திலிருந்து ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் சந்திப்புக்கு முன்னரும் அதன் பின்னரும் தமிழ் புலம்பெயர் சமூகம் நிதி முதலீடுகளை செய்யத் தயாராக இருக்கிறது என்பதை சுமந்திரன் கோடி காட்டினார். அது சரியானதாக இருக்குமா என்று அறிவதில் ஜனாதிபதியும் அப்போதைய பிரதமர் மஹிந்தவும் நடந்த கூட்டங்களில் ஆர்வம் காட்டினார்கள்.

சுமந்திரன் எந்தத் தமிழ்ப் புலம்பெயர் குழுமத்திலிருந்து தன்னால் இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெளிவாக்கவில்லை. நான் அறிந்த அளவில் அவரது பள்ளி தோழரும், நண்பரும், கூட்டமைப்போடு இணைந்து இயங்கும் சர்வதேச தமிழர் ஒன்றியத்தின் (ஏவீய்) சுரேந்திரனின் முனைப்புக்களில் இருந்துதான் அவை வருவதாக இருக்கும் என்று நினைக்கிறேன். புலிகள் ஆதரவு தரப்படும் புலம்பெயர் சமூகம் அதனை சுமந்திரனுடன் இணைந்து செயல்படுத்துவார்களா என்பது கேள்விக்குறியே.

அதையடுத்து விடுதலைப்புலிகளின் நேச மனப்பான்மையுடன் இயங்கும் சிவஞானம் சிறிதரன் நாடாளுமன்றத்தில், தமிழ் புலம்பெயர் சமூகம் ஸ்ரீலங்காவின் கடனை மீட்கும் என்கிறார். யார் அந்த புலம்பெயர் சமூகம் என்ற விவரங்களும் இல்லை.

இவையெல்லாம் காற்றுவாக்கிலான பேச்சுக்களாகத் தெரியவில்லை. ஆனால் பொறுப்புடன் பேசப்படுவதாக எண்ணுகிறேன். இவற்றை ஒட்டி அரசின் தரகர்கள் ரணில், பஸில் போன்றோர் கூட தனிப்பட்ட சந்திப்புகள் ஏற்படுத்தினர் எனத் தகவல்கள் எதுவும் இல்லை.

செல்வம் அடைக்கலநாதன் புலம்பெயர் மக்களால் செய்யப்படும் எந்த முதலீடும் அரசினால் முடக்கப்படும் என்று எச்சரிக்கிறார்.

கொடுக்க விரும்பும் உதவியோ, கடனோ, முதலீடோ எங்கள் கைவசம் – எங்களது கட்டுப்பாடுகளில் – இருக்கும் என்பது திடப்படுத்தப்பட வேண்டும்.

பைடனிற்கான தமிழர்கள் என்ற அமெரிக்க புலம்பெயர் அமைப்பு தமிழ்ப் புலம்பெயர் மக்களால் அப்படியான நிதியைத் தரமுடியும் என்றும், அதற்காக தமிழீழத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும் தங்களது முகநூல் பக்கங்களில் பதிவிடுகிறார்கள். அது பரவலாகப் பகிரப்படுகிறது. ஆனால் இத்தகைய பதிவுகளினால் ஆபத்துப் பலவுண்டு. இவை குட்டையைக் குழப்பி விடும் வேலையாக இருக்கக் கூடாது.

கோட்டா, மஹிந்த, விமல் வீரவன்ஸ, சம்பிக்க போன்றவர்களெல்லாம் சிங்கள பெரும்பான்மையில் பின்னிருந்து நடத்தப்படும் முகங்களுடன் அரசியல் ஆதாயங்களுக்காகப் பேரினவாதப் போக்கை அனுசரித்துப்போகின்றவர்கள்.

‘வியத்மக’, ‘எளிய’ போன்ற பேரினவாதத்தின் பின்னணியில் இயக்குனராக இருந்து, முதலீடு பெற்றுத் தயாரிக்கும் படங்களில் யாரை முன்னணி நடிகர்களாகப் போட்டால் வசூல் வரும் எனத் தீர்மானித்து, மொட்டு கட்சியையும் கோட்டாவையும் பதவிக்கு கொண்டு வந்தவர்கள். ஏற்பட்ட பொருளாதார சீர்கேடுகளால் ‘வியத்மக’, ’எளிய’ போன்றவற்றின் புத்திஜீவிகள் தற்சமயம் பதுங்கி இருந்தாலும் புற்றுநோய் மாதிரி வேரறுக்கப்படவில்லை.

இவர்களுக்கு எல்லாம் கொடுத்த வாக்குறுதியின்படி ஸ்ரீலங்காவை ‘ஒரே நாடு; ஒரே சட்டத்தின்’ கீழ் சிங்கள, பௌத்த நாடாக அமைத்துவிட்டுத்தான் பதவி விலகுவேன், தோற்றுப் போன ஜனாதிபதியாக ஓடிவிட மாட்டேன் என மார் தட்டுகிறார் கோட்டா.



பேரினவாதிகளின் ’வியத்மக’, ’எளிய’ அமைப்பின் ஆதரவாளர்கள் இப்படியான தமிழர் தரப்பின் பேச்சுகளுக்கும் கருத்துகளுக்கும் இனவாத முலாமிட்டு தமிழ் மக்களுக்கு இப்பொழுது எவ்வளவு ‘கொழுப்பு’ வைத்துவிட்டது என்று செய்திகளைப் பரப்புகிறார்கள்.

சட்டியில் இருக்கின்றது என்ற நம்பிக்கையில் அகப்பையை நீட்டலாம். அதை விட்டு சட்டிக்கு வரும் என்றெல்லாம் கணக்கெடுத்து அகப்பையை நீட்டுவதின் எதிரொலிகளையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

‘சிங்களவரின் குருதியில் குளித்து, தலை சீவி, தமிழீழத்திற்கு ஆலிங்கனம் செய்வேன்’ என்றெல்லாம் தேர்தல் மேடைகளில் பேசி, அதன் தொடர்ச்சியாக எவ்வளவோ தியாகங்களும் ஆகுதிகளும் செய்த பெருங்குடி மக்கள் நாம்.

தமிழ் மக்கள் இப்படியான மிதப்புப் பேச்சுகள்,கோரிக்கைகளினால் அரசியலில் எங்கே வந்து நிற்கிறார்கள் என அறிந்து கொண்டு நகர்வை மேற்கொள்ள வேண்டும். அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

மே 9 ஆம் திகதி சம்பந்தப்பட்டோர் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டமையையும், அவர்களது உடைமைகள் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டமையையும் உற்றுநோக்கினால் 1983 ஆண்டின் இனக்கலவரத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை எப்படி கட்டவிழ்க்கப்பட்டது, அதனுடைய வடிவம் எத்தகையது என்பதைக் காணலாம். பேரினவாதிகளிடம் அந்தக் கட்டமைப்புக்கள் இன்னும் உள்ளன. தமிழ் மக்கள் கொடுக்கும் மிராசுதாரர் பிம்பங்களால், பிரிவினையைக் காட்டி, இன வெறியைத் தூண்டி, நாட்டில் மேலும் வன்முறைகளை ஏற்படுத்தி, சூழ்நிலையைப் பலவீனப்படுத்தி, அதிகாரத்தை இராணுவத்தின் உதவியுடன் தமது கையில் வைத்துப் பயணிக்க முயற்சிகள் மேற் கொள்வார்கள்.ஆகவே நாம் கவனமாகக் கருத்துகளை வெளியிட வேண்டும்.

புலம்பெயர் மக்களின் பொருளாதார நிதி உதவிகள் எப்படிப் பெறப்படலாம் என்பதில் காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆரம்ப நாள்களில் சில பொருளாதார நிபுணர்களும் சட்டத்தரணிகளும் தமது ஆய்வுகளின் அடிப்படையில் சில தகவல்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தார்கள். அதன்படி, புலம்பெயரில் வாழும் மக்கள் (இது எல்லா இனத்தவரையும் அடக்கும்) ஒவ்வொருவரும் நாட்டில் உள்ள தமது உறவினர் ஒருவருக்கு இலங்கையின் வங்கி ஒன்றின் மூலமாக ஐந்நூறு டொலர்களை அனுப்பினால் அது உறவினர்களுக்கு சேருவது மட்டுமல்லாமல் நாட்டின் அந்நிய செலாவணி இருப்பையும் கூட்டி நிலைமையை வழமைக்குக் கொண்டு வரும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும் பணப்பட்டுவாடாக்கள் நடக்காமல் இல்லை. ஆனால், அவை எல்லாம் பெருவாரியாக உண்டியல்கள் மூலம் அனுப்பப்படுவதால் மத்திய வங்கிக்குப் பிரயோசனம் அற்றவையாகிவிடுகின்றன. பின்னர் ஒரு குடும்பம் அனுப்புவது ஐந்நூறு டொலர்களாக இருக்க வேண்டியதில்லை, 350 டொலர்களாக இருந்தாலே போதும் என்று அறிவிக்கப்பட்டது. இவற்றை அடிப்படையாக வைத்து பிரதமர் ரணில் கூட புலம்பெயர் சமூகம் அப்படியான உதவிகளைச் செய்து நிதிப்பற்றாக்குறையை நிமிர்த்த வேண்டும் எனப் பரிந்துரைத்தார்.

ஆனால் சிங்கள நாட்டுப்பற்றுப் பற்றாளர்களிடம் இருந்தும் கூட அரசுக்கு உதவி செய்ய அப்படியான தோடல்களோ உந்துதல்களோ இடம் பெற்றனவாகத் தெரியவில்லை.

அதற்கு முக்கிய காரணம் நாட்டில் ஊழல், நிர்வாக சீர்கேடு என்பவற்றால் புலம்பெயர் சமூகம் அரசை நம்பி எதனையும் செய்வதற்குத் தயாராக இருக்கவுமில்லை; விரும்பவும் இல்லை என்பது தான். கொவிட் – 19 தொற்றுக் காலத்தின் பின் புலம்பெயர் அமைப்புகளால் அனுப்பப்பட்ட உதவிகள் கூட அதனை நிர்வகித்த அதிகாரிகளாலேயே சூறையாடப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.

ஏன் ஜனாதிபதி கோட்டா கூட, பிரதமர் ரணிலைச் சுற்றி தற்பொழுது ’டீல்’கள் செய்பவர்கள்தான் இருக்கிறார்கள், இருப்பவர்களைப் பற்றித் தனக்கு தெரியும், ஆதலால் ரணில் கவனமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்துகிறார். பாம்பின் கால் பாம்பறியும். எனினும் நாட்டின் நன்மைக்காகத்தான் ரணிலுக்கு இதைத் தெரியப்படுத்துகிறார் என அவர் கூறியிருக்கின்றார் என்று சொல்லப்படுகிறது. ‘தேசப்பற்றுதாந் அயோக்கியர்களின் கடைசி அடைக்கலம்’ (Patriotism is the last refuge of a scoundrel) என்ற கூற்று



ஒன்று உண்டு. தனது ஆதரவாளர்களை வீதிக்கு ஆயுதங்களோடு அனுப்பும் முன் மஹிந்த கூட தனது நெஞ்சைத் தொட்டு ராம பக்த ஹனுமான் மாதிரி தனது நாட்டுப்பற்றும் விசுவாசத்திலும்தான் நாட்டை பாதுகாக்க (பிரதமர் பதவியை இராஜினாமா) செய்கிறேன் என்று உறுதி அளித்தார்.

இதில் பரிதாபம் என்னவென்றால் இப்படியான பொறுப்பாளர்களையும் நடிப்பு சுதேசிகளையும்தான் மக்கள் நம்புகிறார்கள் என்பதுதான்.

மஹிந்த போரின் முடிவில் நாடு திரும்பும் போது விமான நிலையத்தில் மண்டி இட்டு மண்ணை முத்தமிட்டு, தனது தனது நாட்டுப்பற்றின் உறுதியால் நாட்டைப் பிரிவினைவாதிகளிடமிருந்து மீட்டு விட்டேன் என்று கூறி உண்மையான தேசபக்தி போல பெரும்பான்மையினரை நம்பவைத்தமையை நாம் மறந்து விடக் கூடாது.

(தொடரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=